சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 17.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 287/E/2022 (SA 4747/E/2019)**

திரு.தினகரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மத்திய சென்னை கோட்டம்,
சென்னை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 27.09.2021 மற்றும் 06.08.2025 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் சார்பு திரு.முரளிதரன், இளநிலை உதவியாள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மத்திய சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 09.04.2026-ல் நேரில் ஆஜராகி, 08.04.2026 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில். மனுதாரர் கோரிய தகவல் தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் II(1)) துறை அரசாணை (நிலை) எண்.518 நாள் 06.08.2025-ல், பத்தி 5-ல் (iii) நத்தம் நிலவரித்திட்ட பணிகளை மேற்கொண்டு தகுதியான இனங்களுக்கு மட்டும் ரயத்து மனை பட்டா வழங்கி தூய கணக்குகள் தயார் செய்து பராமரிப்பதற்கு அனுமதி வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி அரசாணையின்படி மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோர் அனுபவத்தின் படியும், சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய் ஆவணங்களின்

அடிப்படையிலும், மனுதாரர் கோரிக்கை தொடர்பாக தனிவட்டாட்சியர், நத்தம் நிலவரி நிலையிலேயே நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜே3/e-2371315/2026, நாள் 09.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி விரபம் மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர், மத்திய சென்னை, சென்னை அவர்களின் ந.க.எண்.அ4(நி)/1004/2026, நாள் 30.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC 287/E/2022 (SA 4747/E/2019)**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மத்திய சென்னை கோட்டம், சென்னை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.தினகரன், த/பெ.கங்காதரன்,
எண்.13/21, வெள்ளாள தெரு,
அமைந்தகரை, சென்னை - 600 029.

Copy to: File MP/PA,